# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## 2026 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 21 ஆந் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி

(2026.08.24 ஆந் திகதியன்று வெளியிடப்பட்டது)

# நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தம்)

**(218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்**

நீதி மற்றும் தேசிய ஒருமைப்பாட்டு அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

விலை : ரூபா 58.00 தபாற் செலவு : ரூபா 150.00

இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் 77அ என்னும் பிரிவைத் திருத்துகின்றது என்பதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது –

(அ) முதன்மைச் சட்டவாக்கத்தின் அத்தியாயம் V கீழ் புரியப்பட்ட தவறொன்று தொடர்பில் புலனாய்வாளரினால் கைப்பற்றப்பட்ட ஏதேனும் அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை விளக்கத்தின் முடிவுறுத்துகைக்கு முன்னர், அதன் மாதிரியொன்றை வைத்துக்கொண்ட பின்னர் அழிப்பதற்கான பொறிமுறையொன்றை அறிமுகப்படுத்துவதுமாகும்; அத்துடன்

(ஆ) அப்பிரிவின்கீழ் அரசாங்க பகுப்பாய்வு அறிக்கை வழங்குவதனை விரைவு படுத்துவதுமாகும்.

## நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தம்)

ச.வ.-ஒ. 8/2026

## (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளு மன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

**1.** இச்சட்டம், 2026 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்

**2.** (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) (218 ஆம் அத்தியாயமான) நஞ்சுகள், அபின் மற்றும் அபாயகரமான அவுடதங்கள் கட்டளைச்சட்டத்தின் 77அ என்னும் பிரிவு இத்தாற் பின் வருமாறு திருத்தப்படுகின்றது:- 218 ஆம் அத்தியாயத்தின் 77அ என்னும் பிரிவைத் திருத்துதல்

(1) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடுவதன் மூலமும்;

"(1) இக்கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் V இன் கீழ் புரியப்படும் தவறொன்று தொடர்பில், ஏதேனும் அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பைக் கைப்பற்றுகின்ற எவரேனும் புலனாய்வாளர், உடனடியாக—

(அ) அத்தகைய அவுடதத்தின், பதார்த் தத்தின், பொருளின் அல்லது தயாரிப்பின், அதன் பொதிகளும் இலச்சினைகளுமுட்பட, அதனது மூல வடிவிலான அதன் நிழற் படங்களைச், சாத்தியமானவிடத்து கட்புல ஒளிப்பதிவுகளுடன் எடுத்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய அவுடதத்தின், பதார்த் தத்தின், பொருளின் அல்லது தயாரிப்பின் அளவினை உள்ள

டக்குகின்ற அறிக்கையொன்றுடன், அச்சு மற்றும் இலத்திரனியல் ஆகிய இரு வடிவிலுமான அத்தகைய நிழற்படங்களையும் கட்புல ஒளிப்பதிவுகளையும் இயைபான நீதிவானுக்குச் சமர்ப்பித்தல் அல்லது அனுப்புதல் வேண்டும்.";

(2) அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவை உடனடுத்து பின்வரும் உட்பிரிவை உட்புகுத்துவதன் மூலமும்:-

"(1அ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 116 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், இக்கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் V இன்கீழான தவறொன்று தொடர்பில், ஏதேனும் அவுடத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பைப் புலனாய்வாளரொருவர் கைப்பற்றுகின்றவிடத்து, அத்தகைய புலனாய்வாளர், பின்வருமாறிருப்பின் அதனைப் பரிசோதனைக்காகப் பகுப்பாய்வாளருக்குச் சமர்ப்பித்தல் வேண்டும்–

(அ) புலனாய்வாளர், 54அ என்னும் பிரிவின்கீழான தவறொன்றுக்காகச் சந்தேகிக்கப்பட்டவர் மேல் நீதிமன்றத்தின் முன்னர் குற்றம்பகரப்படுவதற்குப் பொறுப்புடையவராவாரென அபிப்பிராயப்படின்; அல்லது

(ஆ) நீதிவான், அத்தகைய அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை தோதானதென அவர் கருதின், பரிசோதனைக்காக அரசாங்கப் பகுப்பாய்வாளருக்குச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடின்.

(1ஆ) உட்பிரிவு (1அ) இற்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், புலனாய்வாளர் கனாபிஸ் சற்றிவா எல். என்பதனைக் கைப் பற்றப்படுகின்றவிடத்து, புலனாய்வாளர் அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு பரி சோதனைக்கென அதன் மாதிரியொன்றை மாத்திரம் சமர்ப்பித்தல் வேண்டுமென் பதுடன், எஞ்சுகின்ற அளவு, நீதிவானின் கட்டளையொன்றைப்பின்பற்றிஉடனடியாக அழிக்கப்படுதல் வேண்டும். அத்தகைய அழிப்புப் பற்றிய அறிக்கையொன்று அதன் பின்னர் நீதிவானுக்குச் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

(1இ) 1979 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, குற்றவியல் நடவடிக்கைமுறைச் சட்டக்கோவைச் சட்டத்தின் 116 ஆம் பிரிவின் (3) ஆம் உட்பிரிவுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும்,-

(அ) இக்கட்டளைச்சட்டத்தின் அத்தியாயம் V இன்கீழான தவறொன்று தொடர்பில், ஏதேனும் அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பைப் புலனாய்வாளரொருவர் கைப்பற்றுகின்றவிடத்து; அத்துடன்

(ஆ) பிரிவு 54அ இன்கீழான தவறொன்று தவிர வேறு தவறொன்று தொடர்பில், நீதிவானொருவரின் முன்னிலையில் சந்தேகிக்கப்பட்டவர் நிறுத்தப்படுகின்றவிடத்து,

புலனாய்வாளர், (6) ஆம் உட்பிரிவின்கீழ் குறித்துரைக்கப்படக்கூடியவாறான அத்தகைய அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை நீதிவானின்

கட்டளையொன்றைப் பின்பற்றி உடனடியாக அழித்தல் வேண்டும்.

(1ஈ) உட்பிரிவு (1அ) அல்லது (1ஆ) இன் கீழ், ஏதேனும் அவுடதம், பதார்த்தம், பொருள் அல்லது தயாரிப்பு, அல்லது மாதிரி பெறப்படுவதன்மேல், அரசாங்கப் பகுப்பாய்வாளர் பொதிகளும் இலச்சினைகளுமுட்பட, அத்தகைய அவுடதத்தின், பதார்த்தத்தின், பொருளின் அல்லது தயாரிப்பின், அல்லது அத்தகைய மாதிரியின் நிழற்படங்கள் மற்றும் கிடைக்கின்றவிடத்து வேறு கட்புல ஒளிப்பதிவுகளையும் எடுத்தல் வேண்டும்.";

(3) அப்பிரிவின் (2) ஆம் உட்பிரிவில், "(1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் சமர்ப்பிக்கப்பட்ட ஏதேனும் அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பைப் பரிசோதனை செய்துள்ளவிடத்து" என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள எல்லா சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-

"(1) ஆம் உட்பிரிவின்கீழ் அவருக்குச் சமர்பிக்கப்பட்ட ஏதேனும் அவுடதத்தை, பதார்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை அல்லது மாதிரியை பரிசோதனை செய்துள்ளவிடத்து, அத்தகைய சமர்ப்பணத் தேதியிலிருந்து இரண்டு மாதங்களை விஞ்சாதவொரு காலப்பகுதியினுள், அவர் –

(அ) அவரது பரிசோதனையின் பெறுபேறைத் தருகின்ற அறிக்கையொன்றை; அத்துடன்

(ஆ) உட்பிரிவு (1ஈ) இன்கீழ் எடுக்கப்படும் அச்சு மற்றும் இலத்திரனியல் ஆகிய இருவடிவிலான நிழற்படங்

களையும் கட்புல ஒளிப்பதிவு களையும்

பரிசோதனைக்காக அத்தகைய அவுட தத்தை, பதார்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை, அல்லது அத்தகைய மாதிரியைச் சமர்பிக்கின்ற புலனாய்வாளருக்கும் பொலிசுப் போதைப்பொருள் பணியகத்துக்கு மான பிரதிகளுடன், நீதிவானுக்கு அனுப்புதல் வேண்டும்.";

(4) அப்பிரிவின் (5) ஆம் உட்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் உட்பிரிவை இடு வதன் மூலமும்:-

"(5) உட்பிரிவு (2) இன்கீழான அறிக்கை யையும் இயைபான நிழற்படங்கள் மற்றும் கட்புல ஒளிப்பதிவுகளையும் பெற்றதன் உடனடுத்துப்பின்னரான முதலாவது வழக்கு அழைக்கின்ற தேதியில், குற்றஞ்சாட்டப்படும் சந்தேகிக்கப்பட்டவரொருவர் உள்ளாரென நீதிமன்றுக்கு அறிவிக்கப்படுகின்றவிடத்து, நீதிவான் –

(அ) சந்தேகிக்கப்பட்டவருக்கு அல்லது அவரது வழக்குரைஞருக்கு அத்தகைய அறிக்கையின் பிரதி யொன்றை கையளிக்கச் செய்ய லாம்;

(ஆ) அத்தகைய முதலாவது அழைக் கின்ற தேதியிலிருந்து பதினைந்து நாட்களை விடப் பிந்தாத தேதி யொன்றாக இருக்கவேண்டிய (5ஆ) என்னும் உட்பிரிவின்கீழான கட்டளைகளுக்காக தேதி யொன்றை நியமிக்கலாம்.

(5அ) உட்பிரிவு (2) இன்கீழான அறிக்கை யையும் இயைபான நிழற்படங்கள் மற்றும்

கட்புல ஒளிப்பதிவுகளையும் பெற்றதன் உடனடுத்துப்பின்னரான முதலாவது வழக்கு அழைக்கின்ற தேதியில், குற்றஞ்சாட்டப்படும் சந்தேகிக்கப்பட்டவரொருவர் இல்லையென நீதிமன்றுக்கு அறிவிக்கப்படுகின்றவிடத்து, அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு நீதிவான் –

(அ) நிழற்படங்கள், கட்புல ஒளிப் பதிவுகளும், பொதிகள் மற்றும் இலச்சினைகளும் உள்ளடங் கலான, சான்றுகளை அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப் பட்டவாறாக பேணிக்காப்பதற்கு கட்டளையிடலாம்; அத்துடன்

(ஆ) உட்பிரிவு (1ஆ) இன் கீழ் சமர்ப் பிக்கப்படும் அத்தகைய அவுட தத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை அல்லது மாதிரியை அழிப்பதற்கு அல்லது அழிக்கச் செய்விப்பதற்குக் கட்டளையிடலாம் என்பதுடன் உட்பிரிவுகள் (5ஈ), (5உ) மற்றும் (5ஊ) என்பவற்றின் ஏற்பாடுகள் அத்தகைய அழிப்புத் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடை யதாதல் வேண்டும்.

(5ஆ) உட்பிரிவு (5) இன் பந்தி (ஆ) இல் குறிப்பீடுசெய்யப்படுகின்ற தேதி யன்று நீதிவானின் முன்னிலையில் வழக்கு அழைக்கப்படுகின்றபோது, நிழற்படங்கள், கட்புல ஒளிப்பதிவுகள், பொதிகள் மற்றும் இலச்சினைகள் உள்ளடங்கலான சான்றுகளை அத்தகைய கட்டளையில் குறித்துரைக்கப்பட்டவாறாக பேணிக்காப் பதற்கு அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு நீதிவான் கட்டளையிடுதல் வேண்டு மென்பதுடன் –

(அ) உட்பிரிவு (4) இன்கீழான ஏதேனும் கேள்வி எழுப்பப்பட்டுள்ளவிடத்து, அதனைப் பதிவுசெய்து, அத்துடன் அதன் மாதிரியொன்றை அல்லது (1ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்பட்ட மாதிரியை வைத்துக் கொண்டு பின்னர் அத்தகைய அவுடதத்தை, பதார்த் தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை அழிப்பதற்கு அரசாங் கப் பகுப்பாய்வாளருக்குக் கட்ட ளையிடுதலும் வேண்டும்; அல்லது

(ஆ) உட்பிரிவு (4) இன்கீழ் கேள்வி யெதுவும் எழுப்பப்படாதவிடத்து, அத்தகைய அவுடதத்தை, பதார்த் தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை, அல்லது (1ஆ) என்னும் உட்பிரிவின்கீழ் சமர்ப்பிக்கப்படும் மாதிரியை அழிப்பதற்கு அரசாங் கப் பகுப்பாய்வாளருக்குக் கட்டளை யிடுதல் வேண்டும்.

(5இ) உட்பிரிவு (5ஆ) இன்கீழ் ஆக்கப் படும் கட்டளைகள் பின்வருவோரின் முன்னி லையில் நீதிவானினால் ஆக்கப்படுதல் வேண்டும் –

(அ) அத்தகைய நீதிமன்றின் பதிவாளர் அல்லது அவரின் பிரதிநிதி;

(ஆ) வழக்குத்தொடுக்கும் வழக்குரைஞர் அல்லது குற்றவழக்கை நடாத்து கின்ற புலனாய்வாளர் அல்லது அவரது பிரதிநிதி; அத்துடன்

(இ) எவரேனுமிருப்பின் எதிர் வாதிடும் வழக்குரைஞர் அல்லது எவரேனுமிருப்பின் சந்தேகிக் கப்பட்டவர்.

(5ஈ) உட்பிரிவு (5ஆ) இன்கீழ் ஆக்கப் படுகின்ற கட்டளைகள் இறுதியானதும் முடிவானதுமாதல் வேண்டுமென்பதுடன், ஏதேனும் நீதிமன்றில் கேள்விக்குட்படியாக படுதலுமாகாது.

(5உ) உட்பிரிவு (5ஆ) இன்கீழ் ஆக்கப் படும் கட்டளைகளின் பிரதியொன்று அத்தயை நீதிமன்றத்தின் பதிவாளரினால் அரசாங்கப் பகுப்பாய்வாளருக்கு உடனடி யாக அனுப்பப்படுதல் வேண்டும்.

(5ஊ) உட்பிரிவு (5உ) இன்கீழான கட்டளைகளின் பிரதி பெறப்படுகின்ற தேதியிலிருந்து இரண்டு வார காலப்பகுதி யினுள் அரசாங்கப் பகுப்பாய்வாளர் -

(அ) அத்தகைய கட்டளைக்கு இணங்கி யொழுகவும் (6)ஆம் உட்பிரி வின் கீழ் விதித்துரைக்கப்படக் கூடியவாறான நடைமுறைக் கிணங்கவும் நீதிவானொருவரின் மேற்பார்வையின்கீழ் அத்தகைய அவுடதத்தை, பதார்த்தத்தை, பொருளை அல்லது தயாரிப்பை, அல்லது மாதிரியை அழித்தல் அல்லது அழிக்கச்செய்வித்தல் வேண்டும்; அத்துடன்

(ஆ) அத்தகைய அழிப்பு தொடர்பான அறிக்கையொன்றை இயைபான நீதிமன்றத்திற்கு உடனடியாக சமர்ப்பித்தலும் வேண்டும்.

(5எ) அத்தியாயம் III அல்லது அத்தியாயம் V இன்கீழ் புரியப்படுகின்ற தவறொன்றை விளங்குவதற்கு நியாயாதிக்கத்தைக் கொண்டுள்ள தகுதிவாய்ந்த நீதிமன்றத்தின் நீதிபதி, விளக்கத்தின் முடிவில், (5ஆ)

உட்பிரிவின் (அ) என்னும் பந்தியின்கீழ் வைத்திருக்கப்படும் மாதிரிகளை அழிப்பதற்குக் கட்டளையொன்றை உடனடியாக ஆக்குதல் வேண்டுமென்பதுடன், (5உ) மற்றும் (5ஊ) என்னும் உட்பிரிவுகளின் ஏற்பாடுகள் அத்தகைய அழிப்புத் தொடர்பில் ஏற்றமாற்றங்களுடன் ஏற்புடையதாதல் வேண்டும்.";

(5) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவில், "நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஒருமைப்பாட்டுடன்" என்பதிலிருந்து அப்பிரிவின் முடிவுவரையுள்ள சொற்களுக்கும் எண்களுக்கும் பதிலாக, பின்வரும் சொற்களையும் எண்களையும் இடுவதன் மூலமும்:-

"நீதிச் சேவை ஆணைக்குழுவின் ஒருமைப் பாட்டுடன் பின்வருவனவற்றை ஒழுங்கு விதிகள் மூலம் விதித்துரைக்கலாம் –

(அ) உட்பிரிவுகள் (1) மற்றும் (1ஈ) இன்கீழ் எடுக்கப்படவேண்டிய நிழற்படங்கள் மற்றும் கட்புல ஒளிப்பதிவுகள் தொடர்பான அளவுக்குறியீடுகள்;

(ஆ) உட்பிரிவு (5ஆ) இன் (அ) என்னும் பந்தியின்கீழ் வைத்திருக்கப்பட வேண்டிய மாதிரியின் அளவு; அத்துடன்

(இ) இப்பிரிவின்கீழ் அத்தகைய அவுடதத்தின், பதார்த்தத்தின், பொருளின் அல்லது தயாரிப்பின், அல்லது அதன் மாதிரியின் அழிப்பதற்தான பொறிமுறை.";

(6) அப்பிரிவின் (6) ஆம் உட்பிரிவை உடனடுத்துப் பின்வரும் உட்பிரிவை சேர்ப்பதன் மூலமும்:-

"(7) இப்பிரிவின் நோக்கங்களுக்காக, "புலனாய்வாளர்" என்பது, இக்கட்டளைச் சட்டத்தின் அத்தியாயம் V இன்கீழான தவறுகள் தொடர்பில் புலனாய்வுகளை நடாத்துவதற்கு அதிகாரமளிக்கப்படுகின்ற எவரேனும் சட்ட வலுவுறுத்தல் அலுவல ரெனப் பொருள்படுவதுடன், பொலிசு அலுலரொருவரையும், சுங்க அலுவலரொரு வரையும் மதுவரி அலுவலரொருவரையும் உள்ளடக்குகிறது."; அத்துடன்

(7) அப்பிரிவுக்கான ஓரக்குறிப்பை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாக பின்வரும் ஓரக்குறிப்பை இடுவதன் மூலமும்:-

"அவுடதம் முதலியவற்றின் பகுப்பாய்வும் அழிப்பும் ".

**3.** இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கிநிற்றல் வேண்டும்.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்

அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது